A

BIOGRAPHICAL SKETCH

OF

BRAHMA SREE

THIAGARAJA IYER

(IN TAMIL.)

BY

Pandit. G. VYTHIALINGA PILLAI

KUNJITHABOTHAM & Co.,
AYYANKADAI, TANJORE.

1917.

All rights reserved.] [Price Anna 1.

குஞ்சிதபாதம் திருவிழாப் பிரசுரம் 1.

பிரமம் ஸ்ரீ

தியாகராஜ ஐயர் அவர்கள் சரித்திரம்.

உரத்தூர்

கோ. வைத்தியலிங்கப் பிள்ளை

எழுதியது.

குஞ்சிதபாதம் கம்பெனி
ஐயன்கடை, தஞ்சாவூர்.

The Lawley Electric Printing Press, K. M. Hall, Tanjore.

விலை] 1917. [அணா 1.

மரபு அட்டவணை.

இராமப்பிரமம்

1	2	3
பஞ்சநத ஐயர்	இராமநாத ஐயர்	தியாகராஜ ஐயர்
வேறுபெயர்	(தெரியவில்லை)	1 மனைவிகள் 2
(ஐப்யேசர்)	(Line extinct).	தருமாம்பாள், கமலாம்பாள்
|		/
பட்டாபிராமையர்		சீதாலக்ஷ்மி
|		(= கணவர் அப்புசாமி ஐயர்)
பஞ்சநதஐயர்		|
|		தியாகராஜ ஐயர்
இராமுடுஐயர்		(= மனைவி குருவம்மா)
(Alive.)		(Line extinct).

முன்மொழி.

சிறப்புற் றோங்கிய நம் தென்னிந்தியாவில் பக்தியிலும் சங்கீத சாகித்தியத்திலும் சிறந்து விளங்கிய சங்கீத வித்வ சிரோமணியாகிய தியாகராஜ ஐயர் அவர்களின் பெயரைக் கேட்டிராதவர்கள் மிகச் சொற்பமா யிருக்கலாம். அவர்களை நேரில் காணாதவர்கள் பலர் இருந்தாலும், அவர்கள் செய்த பக்தி ரசமான கீர்த்தனங்களை யாவரும் கேட்டிருப்போம். அவர்கள் ஜீவிய சரித்திரத்தை கற்பனை இன்றி, உள்ளது உள்ளபடியே இனிய தமிழ் நடையில் யாவரும் இலகுவாய் அறிந்து கொள்ளும்படி எழுதி அச்சிட்டுக் குறைந்த விலையில் வெளிப் படுத்திய பண்டிதர் கோ. வைத்தியலிங்கப் பிள்ளை அவர்களின் முயற்சி நாம் யாவரும் அங்கீகரித்துக் கொண்டாடத் தகுந்தது.

இங்ஙனம்,

மு. ஆபிரகாம் பண்டிதர்.

உ

கடவுள் துணை.

பிரமம்ஸ்ரீ தியாகராஜ ஐயர் அவர்கள் சரித்திரம்.

இந்தியாவில் வேதம் தொடங்கின காலம் முதல் ஏழு சுரங்களால் இயன்ற சாமகானம் பயிலப் பட்டு வருகின்றது. இப்போழ்து தமிழ் நாட்டில் வழங்கிவரும் சங்கீதம் மேற்சொன்ன சங்கித மரபில் உண்டானதேயாம். இந்தியாவின் வடபாகங்களில் வெளிநாடுகளின் நவீன நாகரீகம் பெரும்பான்மை கலந்துவர வர இந்திய சங்கீதம் மாறுபாடும் வேறுபாடும் அடையத் தொடங்கியது. அதை நாம் தேசிக சங்கீத மெனப் பெயரிட்டு அழைக்கின்றோம். நமது

திராவிட தேசத்தில் இப்போழ்து பயின்று வரும் சங்கீதம் மேற்சொன்ன தேசிகத்தினின் றும் தனித்துயர்ந்ததென்று உணர்ந்துள்ள சங் கீத வித்துவான்கள் இதையே கருநாடக சங்கீ தம் என்று அழைப்பதுண்டு. இந்தச் சம்பிர தாய சங்கீதம் குரு சிஷ்ய பரம்பரையாகவே பயிலப்பட்டு வந்தமையால் யாரும் தன்முயற்சி யால் பயில்வதற்கின்றிக் குடத்திலிட்ட விளக் காயிற்று. அம்மட்டோ! அதன் வளர்ச்சிக்குக் காரணர்களான தேசமன்னர்கள் செயலற்று வெளிநாட்டரசர்களின் ஆளுகையில் இந்தியா அமரத்தொடங்கிய காலம் முதல் தென் இந்திய சங்கீதம் மதிப்புக்குன்றி, வளர்ப்பாரற்றுப், பயில்வார்தொகை குறையவும் நேர்ந்தது. வளர்க் கும் மன்னரும், பயிலும் புலவரும், கேட்கும் மக்களும் குறைந்தால் அதன் பாடு என்படும்!

இந்தியாவின் மற்றை மாகாணங்கள் கிடக்க; திராவிட மாகாணங்களில் மட்டும் நமது சங்கீ தத்துக்கு இடையிற் சென்ற சில நூற்றாண்டு களாக முன்மதிப்பும் வளர்ச்சியும் சிறிது சிறி

தாகத் தலையெடுக்கத் தொடங்கியது. 10-ம் நூற்றாண்டிலிருந்த இராஜராஜ சோழமன்னனும், கி. பி. 1450-ம் வருஷம் முதல் 1570-ம் வருஷம் வரையும் தஞ்சை நகரை அரசுபுரிந்து வந்த நாயக்கர் ராஜ வமிசத்தினரும், 1570 முதல் 1845 வரையும் ஆண்டுவந்த மராட்டிய மன்னர்களும் இந்திய பிதிரார்ச்சிதமாகிய சங்கீதத்தை வளர்ப்பாராயினர். ஒப்புயர்வற்ற அவ்வித்தையாளரை அவ்வரசர்கள் நன்கு மதித்தனர். அந் நன்கு மதிப்பைப்பெற்று வித்துவான்கள் சங்கீதத்தை விருத்திசெய்து வந்தனர். செய்துமென்ன! இருள்செறிந்த வானத்தில் இளம் பிறை எப்படி ஒளிசிறக்கும். மறைவை யகற்றி அதன் பூரண கலைகளையும் வெளிக்குக் கொண்டு வந்து உபகரித்த மகான் ஒருவர் அக்காலத்தில் உண்டானார்.

அவர் மராட்டிய மன்னர் காலத்தில் இருந்தவர். அந்த மகான் சங்கீதத்தில் அக்காலத்துத் தென் இந்தியாவில் வழக்கத்தில் பயின்று வந்த ராகங்களிலும், வழக்கத்தில் மறைந்திருந்த ராகங்

களிலும் நிறைந்த ஞானத்தைச் சம்பாதித்திருந் தார். அவரைக்குறித்துப் பலர் பலவாறு அபூத மாகவோ காலத்துக்கு ஒவ்வாத கற்பனை யாகவோ பலவேறுபடப் பல கதைகளைச் சொல் லினும் அவர்களுடைய நோக்கமெல்லாம் ஈசன ருளையே அம்மகான்மேல் ஆரோபிக்கின்றதா கின்றது. அவ்வளவில் அவர்களுடைய கற்பித ஆரோபணைகளை வெறுக்க எனக்குவிருப்பமில்லை. அந்த மகானுடைய சங்கீத வித்தியானுபவத்தை அவ்வித்தையில் வல்லவர்களாய பல மேதாவியர் களிடம் கேட்டமட்டிலும், அந்த மகானுடைய கீர்த்தனைகளை ஆராய்ந்தமட்டிலும் அவர் ஈஸ்வ ரானுக்கிரகம் பெற்றவரென்றே நான் சொல்ல வேண்டும். மனிதரைப் புகழ்வோர்க்கு அம்மனி தரால் உதவி கிடைக்கின்றதைப் பார்க்கிறோம். ஈசனைப் புகழ்ந்த அம்மகானை ஈஸ்வரானுக்கிரகம் பெற்றவரெனல் அமையுமன்றே. அம்மகானோ; அழியுந்தன்மை யுடைய மற்றை யின்பத்தைப் புகழ்வார்போலாது அழியாவின்பந்தரும் நிரதி சயவாழ்விற்சே தமது சங்கீதத்தைப்பயன்படுத்தி யவர். அவர் யாரெனின்; இச்சரித்திர நாயகரா

கிய பிரமம்ஸ்ரீ தியாகராஜ ஐயரவர்களே யாவர். இவர் ஒரு விசேட சங்கீத வித்துவான் எனல் மட்டும் அமையாது; பெரியமகான் என்றும் சொல்லலாம். நல்லொழுக்கம் பயின்று வைதீகத்தை வளர்த்துத் தமக்கும் (ஆத்மத்துக்கும்) பிறர்க்கும் நன்மை பயக்கும் வேதவித்துக்களும், நாடு செழிக்கக் கேடொன்று மில்லை யென்றுணர்ந்து நாட்டின் நன்மைக்கு உழைப்பதையே தமக்கு ஆத்மலாபமாகக்கருதும் தேச பக்தர்களும், பின்னோர்களுய்ய முன்னோர்கள் அருளிப்போன கலைஞானங்களை வெளிக்குக் கொண்டுவந்து விளக்கியருளும் வித்துவான்களும் ஓரினமாகிய மகான்களே யாவர்.

கலைஞானங்களில் ஒன்றாகிய சங்கீத வித்தையை இனிது வளர்த்து, நம்மனோர்க்குப் பயன்படுத்தியமட்டில் நில்லாது, அவ்வழியே தாமும் ஆத்மலாபமுற்ற மகானுயினர் நமது தியாகராஜ ஐயர். அக்காலத்தும் இக்காலத்தும் சங்கீதத்தில் வல்ல வித்வான்கள் பலருளராக; ஐயரவர்கட்கு மட்டும் மிகுந்த ஏற்றமும், அவர் செய்த கீர்த்த

னைகளுக்கு மட்டும் அதிக நன்குமதிப்பும் உண்டாக நிமித்தம் என்ன? அவ்வேற்றமும் நன்கு மதிப்பும் அவர்க்கும் அவரது வாக்குக்கும் தகுந்தவைதானா? எதனால் அவை தகுந்தவை? என்று இவ்வாறு ஆராயவேண்டுவது அவசியமாகும்.

ஆராய்ச்சியின்றிச் செய்யும் பக்தியை மூடபக்தி என்பர். வல்லானொருத்தனைக் கண்டவிடத்து மூடபக்தி கெடும். ஒருவரது செயல் குணம் அறிவு முதலியவைகளை அறிந்தே அவர்மாட்டு அன்பு செலுத்த வேண்டும். அறிந்தவிடத்து அன்பு தானேயும் உண்டாய்விடும். அவ்வன்பு சண்டமாருதத்தாலும் அசைக்கமுடியாத அரணாகும். இது கருதியே ஈசனைப் பக்திசெய்வதற்குத் தன்னையும் தலைவனையும் உணரும் பரஞானம் முதற்கருவி என்பர் ஒரு சாரார். இது நிற்க; இனி;

(1) ஐயரவர்கள் தாம் பயின்ற சங்கீதத்தை ஈஸ்வர பக்திக்கே செலவிட்டனர். ஈஸ்வர பக்திக்கே சங்கீதம் ஏற்பட்டதென்பதை அவர்

பாடிய கீர்த்தனைகளே உணர்த்துகின்றன. ஈஸ்வரனை யல்லது அவரது கீர்த்தனைகள் மறந்தும் மானுடர்மேற் பாடப்படவில்லை. பிறர் தமக்குச் செய்த தீமைகளைக் கீர்த்தனைகளில் அவர் குறிப்பாக உணர்த்தியிருக்கின்றனர் என்று சிலர் சொல்லினும்; அது தானும் ஆராயுங்கால் ஈஸ்வரனை வாச்சியமாகக் கொண்ட வேறு தத்துவக் கருத்தமைந்ததாகவே புலனாகின்றது. இதனை இவர் பாடிய "சீதாவர" என்னும் கீர்த்தனத்தில் "ஆகாச சரீரம் பிரமம்" என்னும் எஜுர்வேத வசன அமைந்த சரணத்தால் அறியலாம். இனி;

(2) அவரது கீர்த்தனைகளெல்லாம் அருத்தம் அல்லது கருத்துக்குத் தக்க வர்ணமெட்டுகளமைந்த பாவங்களையே பெரிதும் பொருந்தியிருக்கின்றன. இனி;

(3) நாதத்தைக் கேவலம் மாயாகாரியமென்பர் ஒரு சாரார். செவிப்புலனும் அணுத்திரளின் காரியம் என்பர் மற்றொரு சாரார். நமது ஐயரவர்களோ 'நாதத்தினின்றே எல்லாம் பிறக்கும்,

நாதோபாசனையின்றி முத்தி கிடைப்பதரிது' என்னும் நாதோபாசகருடைய துணிவையே பெரிதும் உடையவர். இதற்கு இவரது "நாத லோலுடை பிர்மாநந்த மோந்தவே" என்னும் கீர்த்தனமே சாட்சி பகர்கின்றது. கருவிகளினால் உண்டுபண்ணும் நாதத்திற்கு உருவ பிம்பாகாரம் உண்டென்று மேல்நாட்டு ரஸாயண சாஸ்திரிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இது யாவரும் அறிந்ததே. சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய அற்பவாழ்நாளைக் கொண்ட மனிதரால் சடமும் அழியுந்தன்மையுமுடைய பொருள்களைக்கொண்டு ஆக்கிய வாத்தியக் கருவிகளுக்கு உருவபிம்பாகாரம் சொல்லப்படுமானால்; முற்றறிவும் முற்றுத்தொழிலுமுடையனாய், என்றும் அழியாத நித்தனுமுள்ள ஈசனால் சித்துத் தன்மையோடாக்கிய நாதத்துக்கு ஈசத்தன்மையுண்டாவது வியப்பாகுமா? பரிபக்குவ காலத்தில் வெளிப்படும் சர்வபூரணமான ஆத்மஞானத்தோடு கூடிய பூரணநாதம் கணக்கு வரையறைக் குட்பட்டு, மனமுவந்த சப்தேந்திரியங்களிலும் ஈடுபட்டு வெளிப்படுமாயின் அந்நாதங்கள் அவற்

றின் கணக்கின்படி சிருட்டிக்கு ரூபத்தோற்ற மாகுமென்று கலைஞானிகள் கூறுவர். "தோற்றம் துடியதனிற் சொல்லும்" என்பது சைவ சுருதி. ஆனால் அந்நாதங்கள் அந்ததந்தப் பக்குவா பக்குவ அதிகாரிகளுக்கேற்க நடந்தியலும். இனி;

4. வலிந்து பொருள்கோடலின்றித் திராட்சா பாகமாகி யாரையும் (பக்குவ அபக்குவிகள், மந்த தீவிரர்கள் முதலியோரை) எளிதில் தன் வசப்படுத்தும் இயல்புடையன ஐயரவர்களுடைய கீர்த்தனைகள். அன்றியில்; இது சுடுமென்று உணர்ந்தோரையும், இது இன்னது செய்யுமென்று உணராதோரையும் தொட்டால் சுடுந்தன்மையையுடைய நெருப்புப்போல யாவருக்கும் இன்பந்தரும் நயத்தையுடையது ஐயரவர்கள் வாக்கு. இனி;

5. (a) ஹார்மோனியம் தவிர எந்த வாத்திய விசேடங்களிலும் அல்லது வாத்திய பேதங்களிலும் தட்டுப்படாமற் சமைந்தியலும் நமது ஐயரவர்களது கீர்த்தனைகள். இனி;

(b) எவ்வகைக் கட்டைச் சாரீரங்களாயினும் எவ்வகைச் சன்னச் சாரீரங்களாயினும் நமது ஐயரவர்களது கீர்த்தனைகள் கையாளப் படின் அவை அச் சாரீர பேதங்களைச் சமப்படுத்திச் சபையிற் பரிமளிக்கச் செய்யும் வளமுடியன. இனி;

(c) ஞானபேதங் (பக்குவம் அபக்குவம், மந்தம் தீவிரம்) களுக்கு ஏற்க நயந்துறவாடுவதில் ஐயரவர்களது கீர்த்தனைகள் வெகு நளின சாதுரியங்களையுடையன. இவ்வாறு வாத்திய பேதங்கள், சாரீர பேதங்கள், ஞானபேதங்களுக்குத் தகுந்தபடி பயன்படும் கீர்த்தனைகளாலும், ஈஸ்வர வாச்சியார்த்தலக்ஷியத்தை யுடைமையாலும், மற்றும் முன் சொன்ன ஆராய்ச்சிக் குறிப்புச் செயல், குணம், அறிவு முதலியவைகளாலும் ஐயாவர்களுக்கும் அவர் கீர்த்தனைகளுக்கும் அக்காலத்திலேயே ஏற்றமும் நன்கு மதிப்பும் உண்டாய்விட்டனவென்று புலனாகின்றது. இக்காலத்தில் அங்கங்கே அநேக கான சபைகள் தோன்றி அனைவர்க்கும் சங்கீதத்தில் விருப்பமும், அதனை

வளர்க்கும் முயற்சியும், அதற்கேற்ற மனக்கிளர்ச்சியும் நாளடைவில் வளர்ந்து வருவதற்குப் படித்தவகுப்பார் சிலர் பலர் சேர்ந்து சங்கீத வித்துவான்களைக் கூட்டிப் பாடிக் கேட்கும் நூதனவழக்கம் ஒன்று தானே! அல்ல அல்ல; ஐயரவர்களின் கீர்த்தனைகளே பெரிய தூண்டுகோலாயின வென்று நான் சொல்வேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இக்காலத்துப் படித்த வகுப்பாரின் சங்கீதப் பிரயத்தனத்தை எடுத்துப்பேச வந்ததென்னெனின்; கேவலம் அநர்த்தமான பத விசேஷங்களைக்கொண்டு சத்தத்தை உண்டு பண்ணி, மனத்திற்கும் சிரவணேந்திரியங்களுக்கும் தற்கால உப சாந்தியான ஒரு திருத்திக்காகவும், பொழுதுபோக்குக்காகவும் மட்டும் அவ்வித முயற்சி புரிவதைவிட, மனக்களிப்பு செவிக்கின்பங்களோடு சாந்த போதத்தையும் விளைவிக்கும் மார்க்க சங்கீத கலாசாலைகள் சிறிதாகவேனும் திராவிட தேசத்தில் நடைபெறச் செய்ய யாரும் முயலாதிருக்கும் குறையை எடுத்துக் காட்டுதற்காகவே யன்றி வேறன்று. இது நிற்க.

ஐயரவர்களின் கீர்த்தனைகளைப்பற்றிச் சொல்லுமிடத்து அவ்வளவுதானே! நாட்டின்வளத்தை

நலிவிக்க வரும் துர்ப்பிச்சம் போலவும், சுயநாட்டுக் கைத்தொழில்களை யமுக்கிப் பொன்முலாம் பெற்று மயக்க வரும் அந்நிய தேசத்துப் பண்டங்கள் போலவும், அந்நிய நாட்டு கிராமபோன், ஹார்மோனியம் முதலிய சங்கீத வாத்தியங்களும், உள்நாட்டுப் பார்ஸி முதலிய கலப்புத்தேசிக சங்கீதங்களும் கூடிக் காலபாசமாகத் தோன்றியிருக்கும் இக்காலத்தும் மற்றினி எக்காலத்தும் மார்க்க சங்கீதத்துக்கு ஐயரவர்கள் கொடுத்துள்ள கீர்த்தனைகள் அமிர்தசஞ்சீவியுமாயிற்று. அம்மட்டோ! ஐயரவர்கள் அருளிய கீர்த்தனைகள் கருநாடகசங்கீதப்பயிரையழிக்கமேலே வட்டமிட்டுத்திரியும் ஆயிரம் காக்கைகளுக்கோர் கல்லென்றும் சொல்லலாம். இன்னும் சொல்லப்புகின் அநேக மன்னர் மன்னர்களும் அவர்களின் செல்வாக்கைப் பெற்ற அநந்த மதங்களும் கூடி ஆயிரக்கணக்கான வருஷங்களாக எதிர்த்துத் தாக்கியும் தனது வேதோக்த அர்த்த புஷ்டியினால் மட்டும்சிறிதும் நிலைதளராமலும் தன்னியல்பு குன்றாமலுமிருக்கும் பரமாஸ்திக இந்துமதம் போல, உட்பகையற்ற எத்தனை அந்நிய நவீன

தேசிக சங்கீதங்கள் தோன்றினும் தியாகராஜ ஐயர் தந்துள்ள கீர்த்தனப்படைகளுள்ளவரையும் மார்க்க சங்கீதம் அல்லது கருநாடக சங்கீத ராச்சியத்தை அழிக்க முடியாது முடியாது.

இத்தகைய ஐயரவர்களைக் குறித்த வரலாறுகளை அறிந்துகொள்ளப் பெரும்பான்மை வாய்மொழியும், சிறுபான்மை அவரது கீர்த்தனைகளும், "சம்பிரதாய பிரதரிசினி" என்னும் சங்கீத நூலுமே யல்லது வேறு எழுத்து மூலமான ஆதாரம் கிடைப்பதரிதாயிற்று. வாய்மொழியும் அவரை நேரே கண்டவர்களுடையதுமன்று. அவர் காலத்திருந்து அவரை நேரிற் கண்டோர் ஒரு சிலரிருப்பினும் இத்தருணம் எனக்குக் கிடைத்திலர். நேரிற் கண்டோரைக் கண்டோரைக் கேட்ட காலமிது. அப்படிச் சிலரைத் தெரிந்து உசாவியும், உசாவிய சில அறிவுடையோரிடம் கேட்டும், அவரது கீர்த்தனைகளை ஆராய்ந்தும், ஆராய்ந்த சில அறிவுடையோரது ஆராய்ச்சியைத் துணையாகக் கொண்டுமே இந் நூல் எழுதப்படுகின்றது. நேரிற் கண்டோரைக்

கண்டோரிடம் உசாவியும், அவரது கீர்த்தனை களை ஆராய்ந்தும் எனக்குச் சொன்னவர்களுள் அதி முக்கியமானவர் தஞ்சை டிரெய்னிங் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் மிஸ்டர் சுந்தரம் ஐயர். தியாக ராஜ ஐயரவர்களுடைய சரித்திரத்தை எழுத வேண்டுமென்று நான் அறிவித்த பொழுது மிஸ் டர் சுந்தரம் ஐயர் தான் பிறரிடம் உசாவி ஆராய்ந்து அறிந்த பல முக்கியமான குறிப்புகளை எனக்குக் கொடுத்து உதவினார்கள். அந்நன்றிக் காக அவர்களை நான் மனமார வாழ்த்துகின் றேன். இனித்; தியாகராஜ ஐயரவர்களின் வர லாறுகளிற் செல்லுவோம்.

திருவாரூர் என்னும் சத்தவிடங்க க்ஷேத்திரத் தில் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் கிரி ராஜகவி என்றொரு வித்துவான் இருந்தார். அவர் ஆந்திரப் பிராமணர். பாரத்துவாச கோத்திரத்தினர். ஆபஸ்தம்ப சூத்திரமுடை யார். தெலுங்கர்களில் முரிகிநாடு என்னும் உள் வகுப்பைச் சேர்ந்தவர். அவரைச் செருகூர் வாடு . என்றும் சொல்வார்கள். அவருக்கு

மூன்று குமாரர்களிருந்தனர். அம்மூவரில் கனிட்டர் இராமப்பிரமம் என்பவர். இவருக்கும் மூன்று புதல்வர்கள். அம்மூவருள்ளும் கனிட்டர் இச்சரித்திர நாயகராகிய தியாகராஜ ஐயர்.

தியாகராஜ ஐயருக்குத் தந்தை இராமப்பிரமம் என்பதைத் தியாகரர்ஜ ஐயர் பின் பாடிய "தொருகு இடு வண்டி" (பிலஹரி ராகம், ஆதிதாளம்) என்னும் கீர்த்தனையில் "ராமப்ரம்ம தநயுடௌ த்யாகராஜுநுத பாடுசு நூசக" என்னும் சரணத்தாலும், தற்காலம் திருவையாற்றில் உள்ள இராமுடு ஐயரின் வாய்மொழியாலும் அறிகிறோம். இராமப்பிரமத்தின் வமிசாவளியை இச்சரித்திர முகப்பில் வரைந்துள்ள அட்டவணையிற் கண்டுகொள்க.

இனித்; தியாகராஜ ஐயர் திருவாரூரில் கி-பி 1770-ம் வருஷத்தில் பிறந்தார்.

திருவாரூரில இவர் பிறந்தார் என்பதற்கு வேறு எழுத்து மூலமான ஆதாரங்களில்லை. ஆனால் தியாகராஜன் என்னும் பெயருண்மையாலும், 1803-ம் வருஷமுதல் 1862-ம் வருஷம் வரையும் உயிர்வாழ்ந்திருந்த சங்கீத வித்துவான் சாமாசாஸ்திரிகள் குமாரர் சுப்பராய சாஸ்திரிகளின் குடும்பத்தாருடைய வாய்மொழி கொண்

டும் அதை ஒப்புக்கொள்ளச் சிறிது இடமுண்டாகின்றது. இவர் பிறந்த வருஷம் 1770 என்பதைச்—சாதக முதலிய ஆதாரங்களிலிலையாயினு—இவர் சித்தியான வருஷத்தையும், இவர்க்கு வயது இத்தனையென்று கேட்கும் வாய்மொழியையும் வைத்து ஆராய்ந்து கணக்கிட்டதைக் கொண்டு ஒருவாறு துணிகின்றோம்.

தியாகராஜ ஐயர் சிறுவராயிருக்கும்பொழுது இராமப் பிரமம் திருவாரூரை விட்டுக் குடும்பத்துடன் திருவையாறு என்னும் சைவத் திருநகரில் குடிபுகுந்தனர்.

திருவையாற்றில் இவர் குடி புகுந்தமைக்குக்காரணம்; 1763-ம் வருஷமுதல் 1773-ம் வருஷம் வரையும் முதன்முறையாகவும், பின் 1776 முதல் 1787 வரையில் இரண்டாம் முறையாகவும் தஞ்சை நகரை அரசு புரிந்துவந்த துளஜாஜி மகாராஜா என்னும் மராட்டிய மன்னர் இராமப்பிரமத்துக்குப் பாபநாசம் தாலூகா பசுபதிகோயில் கிராமத்தில் சிறிது நிலம் சருவமானியம் கொடுத்ததாகவும், அதைப்பாதுகாக்கவும் காவேரி தீர வாசத்தைக் கருதியும் திருவாரூரை விட்டுத் திருவையாற்றை அவர் வாசஸ்தானமாக்கிக் கொண்டாரென்றும் ஐயரவர்களின் வாலாஜிபேட்டைச் சீடர் பரம்பரையின் வாய்மொழி கேட்கின்றோம்.

இனி; பதினைன்காவது வயதில் ஐயரவர்களுக்குச் சங்கீதப் பயிற்சியில் விருப்பம் உண்டாயிற்று. அது தெரிந்து அவரை அவர் தந்தை இராமப்பிரமம் அக்காலத்தில் திருவையாற்றில் சங்கீத வித்துவானுயிருந்த சொண்டி வேங்கடரமண ஐயரிடம் ஒப்புவித்தனர். இதுவும் வாய்மொழியேயாம். அக்காலத்தில் அநேக சங்கீத வித்துவான்கள் இருந்தமையால் ஐயரவர்கள் சங்கீதத்தில் நல்ல தேர்ச்சிபெற இடமுண்டாயிருந்தது. அந்தத் தேர்ச்சியினைல் ஐயரவர்கள் ஆந்திர (தெலுங்கு) பாஷையில் அநேக கீர்த்தனைகளைப் பாடத் தொடங்கினர். ஐயரவர்களுக்கு ஸ்ரீராமபிரானிடத்து மிகுந்த பக்தி உண்டு. பக்தி மிகுதியால் ஸ்ரீராமபிரான்மேல் நாள்தோறும் அநேக கீர்த்தனைகள் பாடுவாராயினர்.

பக்தி மிகுந்து ஸ்ரீராமபிரானை அவர் பாடிவரும் நாட்களில் கானரிஷியாகிய நாரதமுனிவர் ஒரு சந்நியாசியாகத் தியாகராஜ ஐயரிடம் வந்து அவரது கீர்த்தனைகளைக் கேட்டு மகிழ்ந்து

அருள்மிகுதியால் ஐயரவர்கட்கு ஸ்ரீராமமந்திரத்தை உபதேசித்தார். அன்றியில் "ஸ்வரார்ணவம்" என்னும் சங்கீத நூல் ஒன்றை ஐயரவர்கட்குக் கொடுத்துப் போயினர்.

இவ்வாறு தியாகராஜ ஐயர் கீர்த்தனைப் புத்தகங்களில் அவரது சரித்திரங் கூறுகின்றது. தமக்குச்செய்த நன்றிக்காக ஐயரவர்கள் நாரதர்மேல்

கானடா ராகம்—ரூபகதாளம்.

(1) "ஸ்ரீ நாரத"

தர்பார் ராகம்—ஆதிதாளம்.

(2) "நாரத குருஸாமி"

ஸ்ரீ ராகம்—சாபுதாளம்.

(3) "வர நாரத"

என்னும் கீர்த்தனைகளைப் பாடியதாகச் சாட்சியும் பகர்கின்றது. 'ஸ்வரார்ணவம்' என்னும் சங்கீத நூலில் ஐயரவர்களுக்கு மிகுந்த விருப்பம் உண்டென்று அவர் செய்த "ஸ்வர ராக ஸுதா ரஸயுத பக்தியே" (சங்கராபரண ராகம்—ஆதிதாளம்) என்னும் கீர்த்தனத்தில் "ஸ்வரார்ணவ மர்மமுலு" என்னும் சரணத்தால் அறிகிறோம்.

இனி; இருபத்தெட்டாவது வயதுக்குள் ஐயரவர்கள் சங்கீதத்திற் சிறந்து விளங்குவதைக் கண்டு மகிழ்ந்து அத்தகைய சரியான குமாரப் பருவத்திலே அவரது தந்தை இராமப்பிரமம் திருவையாற்றில் தருமாம்பாள் என்னும் கன்னிகையை விவாகம் செய்வித்தனர். ஐயரவர்கட்கு விவாகமுடிந்து சில நாட்சென்று இராமப்பிரமம் சிவப்பிராப்தி யடைந்தார். அவர் இறக்குங்கால் குடும்பத்தில் சொல்லத் தகுந்த சொத்தின்மையால் இராமப்பிரமத்தால் பூசிக்கப்பட்டுவந்த சீதாசமேத ஸ்ரீராம லக்ஷ்மண விக்கிரகங்களே நமது ஐயரவர்கட்குப் பரம பிதிரார்ச்சிதமாயின. மூத்தகுமாரர்களிருவரும் இலௌகீக புத்தியுடையவர்களா யிருந்தமையால் அவர்களுக்கு வீதப்படியுள்ள பொருளைப் பகுத்துக் கொடுத்து, வைதீக வொழுக்கம் நிரம்பிய நமது ஐயரவர்கட்குப்பாகப்பொருளுடன் மேற்கண்ட விக்கிரகங்களையும் அளித்துப்போயினர். பிதாவிடம் அவைகளைப் பெற்றுக்கொண்ட நாள்முதல் ஐயரவர்கள் முன்னிலும் அதிகமாக ஸ்ரீராமபக்தி மிகுந்து

லலிதா ராகம்—ரூபகதாளம்.

(1) "சீதம்மா மா யம்மா"

தர்பார்ராகம்—திரிபுடைதாளம்.

(2) "எதுண்டி விடலேதி வேர"

சாலகபைரவி ராகம்—ஆதிதாளம்.

(3) "யால அவதார மேத்து"

என்பனவாதி பல கீர்த்தனைகளைப் பாடினர்.

சுமார் இருபத்தெட்டு வயதான இளம்பருவத்தில் தஞ்சைநகரை 1798ம் வருஷம்முதல் 1833ம் வருஷம் வரையில் அரசுபுரிந்த சரபோஜி மகாராஜாவுக்கு நமது ஐயாவர்களிடம் மனவருத்தம் உண்டுபட்டது. அம்மட்டோ, குடும்பத்திலும் நமது ஐயாவர்களோடு தமையன்மார்களுக்கு ஒற்றுமையின்றிச் சிறிது கலகமும் நேர்ந்தது.

சரபோஜி மகாராஜா திருவையாற்றில் இப்போழ்துள்ள கலியாணமால் என்னும் கட்டிடத்தைக் கட்டுவித்துத் தஞ்சையினின்றும் அடிக்கடி அங்குப் போய் வாசஞ்செய்வதுண்டு.

சரபோஜி மகாராஜா சங்கீதத்தில் அதிக விருப்புடையவர். ஆங்கிலம் பயின்றவர். ஸ்வார்ட்ஸ் (Schewarz)

பாதிரியார் மூலமாக ஐரோப்பிய நாட்டுமுறைப்படி சங்கீத கலைகளும் பயின்றவர். இவர் காலத்திற்றான் மேல்நாட்டுப் பாண்டுவாத்தியத்தில் நமது மார்க்கசங்கீதம் கலந்து அமைக்கப்பட்டது. யாரும் உணர்ந்திருக்கலாம்.

மார்க்க சங்கீத மென்பது விதிமுறைப்படி அமைந்த சங்கீதம். தேசிகம் கலப்பு.

நமது ஐயரவர்களுடைய சங்கீத வித்தியா தேர்ச்சியையும், அவரது கீர்த்தனைகளின் அருமை பெருமைகளையும் உணர்ந்த சரபோஜி மகாராஜா கலியாணமால் கீழண்டைச் சுவருடன் ஒட்டிக் கட்டியிருந்த ஐயரவர்களின் வீட்டுக்குச் சென்று, ஐயரவர்களைக் கண்டு, அரண்மனைக்கு அழைத்தார். ஐயரவர்களை அரண்மனை வித்துவானாக்கிக்கொள்ளவேண்டுமென்பது மகாராஜாவின் கருத்து. ஐயரவர்கள் அதற்கு இணங்கவில்லை. இணங்காமல் மகாராஜாவுக்கு நேரான பதிலின்றி ஈஸ்வரமுகமாக ‘உமது அருகிலிருப்பதைவிட ராஜசேவைமேலா, உமது கிருபையைவிட ராஜசிநேகம்பெரிதா’ என்று பொருள் தரும் அநேக கீர்த்தனைகளைப் பாடினார். அவைகளிற் சில இவை என்பர்.

சாலகபைரவி ராகம்—ஆதிதாளம்.

(1) "பதவிநீ சத்பக்தியு"

சாவேரி ராகம்—ஆதிதாளம்

(2) "கர்ண தல்லி நீவு"

கல்யாணி ரரகம்—சாப்புதாளம்.

(3) "நிதிசால ஸுகமா"

இவ்வாறு பாடவே மகாராஜாவுக்குக் கோபம் மூண்டது. அதனல் ஐயரவர்களுக்குப் பல இடர்களைச் செய்தார். துறவிக்கு வேந்தன் துரும்பு என்னும் பழமொழியை நமது ஐயரவர்கள் காட்டிவிட்டனர்.

அரசன் சொல்லைக் கேளாமையே நமது ஐயரவர்களிடம் தமையன்மார்களுக்குக் கோபமுண்டாகக் காரணமாயிற்று. மூத்ததமையன் பஞ்சநத ஐயர் என்பவர் நமது ஐயரவர்களைக் கண்டிக்கத் தொடங்கினர். அக்கண்டனைகளுக்கும் ஐயர் சலியாமை கண்டு, தம்பியைக் கட்டிவைத்துத் துன்பு செய்யவும் முயன்றனர். அதனல் அவர்களுக்குள் பெருங் கலகமுண்டாயிற்று.

இப்படிச் சொல்லும் வாய்மொழிக்கு ஏதுவாக ஐய ரவர்கள் பாடிய அடியிற்கண்ட கீர்த்தனைகள் ஒத்தியலு கின்றன.

அடாணா ராகம்—ஆதிதாளம்.

(1) " கட்டுஜேஸி நாவோ "

அடாணா ராகம்—திரிபுடைதாளம்.

(2) " ஏ பாபமு ஜேஸிதிரா "

ஜங்கல ராகம்—ஆதிதாளம்.

(3) " அனு துடனு கானு "

அன்றியில் ஐயரவர்கள் பூசை செய்யும் விக்கிரகங்களை ஒருநாள் அவர் தமையன் காவேரி யில் கொண்டுபோய் எறிந்துவிட்டார். அது தெரிந்து ஐயரவர்கள் காவேரிக்குச் சென்று ஆற்றிலிறங்கித் தேடியெடுத்து வந்து வழக்கம் போலப் பூசிக்கலானார்.

இதற்கு ஆதாரமாக ஆற்றில் விக்கிரகங்களைத் தேடும் பொழுது அவர் பாடியதாக

ஹரிகாம்போதி ராகம்—ஆதிதாளம்.

(1) " நேனெந்து வெததுரா "

=நான் உன்னை எங்கே தேடுவேன்.

தோடிராகம்—சாப்புதாளம்.

(2) " எந்து தாகி நாடோ "

=எங்கே நீ ஒளிந்திருக்கின்றனையோ.

வசந்தராகம்—ஆதிதாளம்.

(3) " எட்லா தோரிகிதோ "

=எப்படி எனக்கு நீ அகப்படுவாய்.

என்னும் கீர்த்தனைகளைக் குறிக்கின்றனர்.

தமயன் செய்து வரும் இவ்வித இடைஞ்சல்களைக் குறித்து ஐயரவர்கள் பரிதவித்துச் சில கீர்த்தனைகள் பாடினார். இதனை

ஸ்வராவளிராகம்—ஜம்பைதாளம்.

(1) " ப்ராரப்த மிடலுண்டக "

= பிராரத்தவினை இப்படி இருந்தால்
யாரை என் சொல்லலாம்.

என்னும் கீர்த்தனை குறிப்பிடுகின்றது.

இவ்வாறு ராஜகோபமும் சகோதர இடைஞ்சலும் உண்டாகி நெருக்கிவரும் இத்தருணத்தில் ஐயரவர்களுக்கு இன்னுமோர் பெருந்துயரமும்

ஏற்பட்டது. அவர் மனைவியார் மாதுஸ்ரீ தருமாம்பாள் சிவலோகப்பிராப்தி யடைந்தார். தமது தருமபத்தினி இறந்தமையைக் குறித்து ஐயரவர்களுக்குப் பெருந் துக்க முண்டாகிப், பிரிவாற்றாமையால் வருந்திப் பல வுருக்கமான பாடல்களைப் பாடினார். இதற்கு

பிலஹரி ராகம்—ஜம்பை தாளம்.

(1) "தோலிஜன்ம முன"

சுத்த பங்காளம்,—ஆதிதாளம்

(2) "தோலிநே ஜேஸின"

அடாணா ராகம்,—திரிபுடை தாளம்

(3) "ஏபாபமு ஜேஸிதிரா"

என்னும் கீர்த்தனைகளை ஆதாரங் கூறுவர்.

மூத்த மனைவியார் தவறினமையால் தமக்கும் தமது ஆத்மபூசைக் கைங்கரியத்துக்கும் உதவியாகத் தமது முப்பத்தைந்தாவது வயதில் கமலாம்பாள் என்னும் கன்னிகையை மணம்புரிந்தார். பெயரைக்கொண்டு கமலாம்பாள் திருவாரூராயிருக்கலாமென் றூகிருணயிக்கப்படுகின்றது. கமலாம்பாளோடு இல்லற தருமத்தை ஈஸ்வர

முகமாக நடத்திவரும் நாளில் கமலாம்பாள் வயிற்றில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குச் சீதாலக்ஷ்மியம்மாள் என்று பெயரிட்டு அருமையாய் வளர்த்து வந்தனர்.

சீதாலெக்ஷ்மியைச் சரஸ்வதியவதாரம் எனவும், அந்தக் குழந்தை குழந்தைப்பருவத்திலேயே ஒரே முறையில் எதையுங்கேட்டுப் பாடம் பண்ணுவதில் மிகுந்த சக்தியுடையதாயிருந்ததெனவும், நாள் தோறும் ஐயரவர்கள் நவ நவமாகப் பாடும் கீர்த்தனைகளைக் கேட்டுக்கொண்டிருந்து, தந்தை வெளியிற் சென்றிருக்கும் பொழுது அன்னைக்கு அக்கீர்த்தனைகளின் தத்து வார்த்த மர்மத்தை விளக்கிக்காட்டுவது வழக்கமெனவும் சிலர் சொல்லுகின்றனர். இந்தத் தெய்வ சக்தி ஆரோபணை இக்காலத்தவர்க்கு ஒவ்வாவிடினும் "பிதாவின் ஆத்ம சேஷமே பிள்ளை" யெனச் சொல்லும் நியாயத் தாலும், "தக்கார் தகவில ரேன்ப தவரவர்—எச்சத் தாற் காணப்படும்" என்னும் உண்மையாலும் சீதா லக்ஷ்மியம்மாளுக்குக் குழந்தைப் பருவத்தில் இச்சக்தி யுண்டானது ஒருவாறு ஒப்புக்கொள்ளப்படலாமன்றோ!

சீதாலக்ஷ்மியம்மாளை உரிய பருவத்தில் குப்புசாமி ஐயர் என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்தனர். ஐயரவர்களிடம் பக்தியுடைய பெருஞ்செல்வர்கள் பலர் அக்காலத்திருந்தமையால் விவாகம் வெகு சிறப்பாக நடந்தேறியிருக்கலாம். அப்பொழுது ஐயரவர்களின் சீடர் வேங்கடரமண பாகவதர் என்பவர் வாலாஜிபேட்டையினின்று வரிசை எடுத்ததுடன் ஐயரவர்களுக்கு மிகுந்த விருப்பமான ஸ்ரீ ராமபடம் ஒன்றைச் சீதை இலக்ஷ்மண சமேதமாய்க் கொண்டு வந்து கொடுத்தார். அக்காலம் ரெயில் முதலிய போக்குவரவுச் சாதனங்களில்லாத நெடுநாட் பிரயாணமுள்ளதாகலின் வெகுதூரத்திலுள்ள வாலாஜிபேட்டையிலிருந்து வந்த ஸ்ரீ ராமமூர்த்தியின் படத்தை பக்திமிகுதியால் படமென்றெண்ணிவிடாமல் ஸ்ரீ ராமமூர்த்தியே திருவடிநோவ நடந்துபோந்தன ரென்று கருதி மனமுருகினர். இக்குறிப்பை இவர் பாடிய

மோகனராகம்—ஆதிதாளம்

"நடசி வச்சிதிவோ நனி பாலிம்ப"

=என்னைக் காக்க நடந்துவந்தீரோ
என்று பொருள்தரும் கீர்த்தனம் உணர்த்துகின்றது.

பிறகு தலயாத்திரை செய்யக்கருதி ஐயரவர்கள் சீடர்கள் பலர் தம்மைச் சூழ்ந்து தொடரத் திருவையாற்றைவிட்டுப் புறப்பட்டார். ஸ்ரீரங்கம் சென்று ஸ்ரீரங்கநாதரைச் சேவைசெய்து,

காம்போதி ராகம்—ஆதிதாளம்

(1) "ஓரங்கசாயி"

சாரங்கா ராகம்—ஆதிதாளம்.

(2) "கருண ஜூட வையா"

தேவகாந்தாரி—ஆதிதாளம்

(3) "விந ராத நாமனவி"

என்னும் கீர்த்தனைகளால் தோத்திரஞ்செய்து திரும்பினார். அதன் பிறகு திருப்பதியைச் சேர்ந்து ஸ்ரீவேங்கடாஜலபதியைத் தரிசனை செய்யத் தொடங்குகையில் சந்நிதானத்தில் திரை போடப்பட்டிருந்தது. அதைத் தத்துவார்த்தமாகப் பாவனை செய்து

கௌளி பந்துராகம்—ஆதிதாளம்

"தேர தீயக ராதா லோனி"

என்னும் கீர்த்தனத்தைப் பாடினார். உடனே திரை அறுந்து விழுந்ததென்று சொல்லுவர். வேங்கடாசலபதியைத் தரிசித்துக் கொண்டு கோவூர் என்னுமிடத்துக்குச் சென்றார்.

கோவூரில் உபநிஷத்பிரமம் என்பவர் ஒருவரிருந்தார். அவர் இராமப்பிரமத்தின் சிநேகர். அவருடைய சீடர்களில் சுந்தரேச முதலியார் என்பவர் ஒருவர் பெருஞ் செல்வர். அவர் நமது ஐயரவர்களை ஆதரித்தார். அங்குச் சில நாள் தங்கி அவ்வூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமானைப் பல கீர்த்தனைகளால் தோத்திரஞ் செய்தார். அவைகள் இவை:—

கல்யாணி ராகம்—ரூபகதாளம்

(1) “ நம்மி வச்சின நன்னு ”

பந்துவராளி—ரூபகதாளம்

(2) “ சம்போ மகாதேவ ”

சங்கராபரணம்—ஆதிதாளம்.

(3) “ சுந்தரேஸ் வருணி ஜூசி ”

சகனராகம் — ஆதிதாளம்.

(4) " ஈவஸுத நீவண்டி "

கரஹரப்பிரிய—ஆதிதாளம்.

(5) " கோரீ சேவிம்ப ரரே "

இவ்வாறு கீர்த்தனைகள் பாடிச் சிவதரிசனம் செய்துகொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். புறப்படுங்கால் சுந்தரேச முதலியார் ஐயரவர்களுடைய சீடர்கள் மூலமாக ஆயிரம் ரூபா அடங்கிய ஒரு பணப்பையை ஐயரவர்கள் ஏறிச்செல்லும் வண்டியில் வைத்துவிட்டு விடைபெற்றுத் திரும்பினர், வண்டியில் முதலியார் பணப்பை வைத்தது ஐயரவர்கட்குத் தெரியாது. வண்டி வாலாஜிபேட்டைக்கு வரும் வழியில் திருடர்கள் வந்து சூழ்ந்துகொண்டனர். அது கண்டு சீடர்கள் முதலியார் வண்டியில் பணப்பை வைத்துப்போனதை அறிவிக்க ஐயரவர்கள் திருடருக்கு அஞ்சித் தாம் வழிபடுதெய்வத்தை நினைந்து தோத்திரஞ்செய்தார்.

இந்த வரலாற்றுக்கு ஐயரவர்கள் அப்பொழுது பாடியதாகக் கூறும்

தர்பார் ராகம்—ஆதிதாளம்

"முந்து வேநக நிரு"

முன்னும் பின்னும் பக்கங்களிலும் என்னைக் காத்தருளும் என்னும் பொருளமைந்த கீர்த்தனம் ஆதாரமாகின்றது.

அப்பொழுது இரண்டு கொத்தவால்கள் (சேவகர்) அங்கே வந்து விடியுமளவும் வண்டியைத் தொடர்ந்து சென்று விடிந்தவுடன் மறைந்து விட்டதாகச் சிலர் சொல்லுகின்றனர்.

பிறகு ஐயரவர்கள் வாலாஜிபேட்டைக்குப் போனார். அங்கே ஐயரவர்களின் சீடரான வேங்கடரமண பாகவதர் ஐயரவர்களை எதிர் சென்று அழைத்துப்போய் வந்தனைவழிபாடுகள் செய்து உபசரித்துச் சீடர்களுடன் அவர் தாராளமாய் வசிக்கத்தக்க இடமும் மற்ற வசதிகளும் செய்து கொடுத்து ஆதரித்தார். அவர் சௌராட்டிக மரபினர். ஐயரவர்களிடம் மிகுந்த பக்தி பூண்டவர். அவரது நல்லொழுக்கம், குருபக்தி, ஈஸ்வர பக்திகளைக் கண்டு வியந்து ஐயரவர்கள் அவருக்கு ஸ்ரீராம மந்திரத்தை உபதேசித்தார்.

அத்தருணத்தில் ஐயரவர்கள் பாடின கீர்த்தனம் இது: "ஞானமோசகராதா" (ஷட்விதமார்க்கினி ராகம்—ரூபகதாளம்) என்கின்றனர். அங்குச் சிலநாள் தங்கிப் பிறகு திருவையாற்றை நோக்கிப் புறப்பட்டார். வழியில் திருவிடைமருதூர் கோவிந்தபுரம், நாகபட்டினம் முதலிய திவ்விய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவையாறு வந்து சேர்ந்தனர்.

ஐயரவர்கள் தலயாத்திரைக்குப் புறப்படுமுன்னும் வழியில் யாத்திரைக் காலத்தும் நடந்ததாகச் சில குறிப்புகளைக் கீர்த்தனப் புத்தகத்து முகப்பில் சரித்திரம் கூறுகின்றது. அவற்றின் சுருக்கத்தையும் இங்கெடுத்துக்காட்டாமலிருக்க முடியவில்லை. "ஸ்ரீ இராமபிரான் ஐயரவர்களின் கனவில் தோன்றுவதுண்டு. ஐயரவர்களின் தருமபத்தினியோடு தருமசம்வர்த்தனி யம்மை சம்பாஷணை செய்துகொண்டிருப்பது வழக்கம். ஐயரவர்களைக் கண்டால் தருமசம்வர்த்தனி மறைந்துவிடுவாள். அவ்விபரத்தை ஐயரவர்கள் தன்னியல்பாகவே அறிந்து கீர்த்தனைகளில் வெளியிட்டுள்ளார். அப்படி வெளியிட்ட கீர்த்தனைகள் "மந்தகமந" "அம்ப நந்நுகந் தல்லி" "நந்நுகந் தல்லி" என்பனவாம்.

இனிக் ; கோவூரினின்று திரும்பி வருங்கால் வழியில் திருடர்கள் வந்து சூழ அவர்களுக்கு அஞ்சி ஐயரவர்கள் ஸ்ரீ ராமரைக் குறித்துப் பாடியபொழுது ஸ்ரீ ராம லக்ஷ்மணர்களே கொத்தவால்களாக வந்து வண்டியின் இரு புறமும் நின்று திருடர்கள் மேல் அம்புகளெய்து தடை செய்து வந்தனர்கள். விடிந்தவுடன் அவர்கள் மறையவே; திருடர்கள் ஐயரவர்களிடம் வந்து, தங்களை அம்புகளெய்து தடைசெய்து நின்ற கொத்தவால்கள் விடிந்தவுடன் மறைந்துவிட்டதாகச் சொல்லவே; ஐயரவர்கள் திருடர்களுக்கெய்திய சுதரிசனக் காட்சி யனுபவம் தமக்கெய்தாமையைக் குறித்துப் பரிதவித்து "ஏராமபாண" "எவிரிச்சிரி," "வாசாமகோசர" என்னும் கீர்த்தனைகளைப் பாடினர். ஐயரவர்களுடைய சாந்தபோத பக்தி யாசாரத்தைக் கண்டு திருடர்கள் நல்லொழுக்கம் பெற்றனர்.

பிறகு வாலாஜ்பேட்டைக்கு வரும் வழியில் கிணற்றில் விழுந்து இறந்து கிடந்த ஒரு பிராமணனைக் குறித்து அவன் மனைவி துயரப்படுதலைக் கண்டு இரங்கி; "நாஜீவாதாரம்" என்னும் கீர்த்தனையைப் பாடவே இறந்து கிடந்த பிராமணன் உயிர்பெற்றெழுந்தான்

திருவையாற்றில் கோவிந்ததாசன் என்பவன் பாடிய கானத்திற்கு மகிழ்ந்து கொண்டாடினர்.

காசியிலிருந்து இராமேச்சுர யாத்திரைக்குச் சென்ற ஒரு பக்தனுடைய கனவில் ஸ்ரீ ராமபிரான் தோன்றி 'என் பக்தன் தியாகராஜன் திருவையாற்றில் உளன், அவனைப் போய்த் தரிசித்துக்கொண்டு செல்' என்று கட்டளையிட அவ்வாறே அவன் திருவையாற்றில் ஐயரவர்களைக் கண்டு தன் கனவில் அனுக்கிரகமானதைச் சொல்ல ஐயரவர்கள் அதற்கு உளம் பூரித்து 'தாஸரதே' எனும் கீர்த்தனையைப் பாடி ஆனந்தமடைந்தாரென்பர்.

இனி; ஐயரவர்களின் சித்தியொன்றே எஞ்சி நின்றது. பக்தி மார்க்கத்தில் சிறிதும் வழுவாமல் அதற்கடுத்த நல்லொழுக்கத்தோடு எழுபத்தேழு வயது வரையில் உயிர் வாழ்ந்திருந்து கலியுகாதி நாலாயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டில் நிகழ்ந்த பராபவ வருஷம் தை மாதம் கிருஷ்ண பட்ச பஞ்சமி திதியில் புதன் கிழமை (அதாவது இங்கிலீஷ் 1847ஆம் ஜனவரி மீ 6உ) சந்நியாசம் பெற்றுப் பரிபூரண சித்தியடைந்தார்.

இவர் சித்தியாவதற்குப் பத்து நாள் முன்பு ஸ்ரீ ராமபிரான் இவரது சொற்பனத்தில் தோன்றி 'நீ இன்

னும் பத்து நாளில் நமது திருவடியை அடைவாய் என்று சொன்னதாகச் சொல்லப்படுகின்றது. இதற்கு

சனகராகம்—ஆதிதாளம்

" கிரிபை நெலகொன்ன ராமுனி "

என்னும் கீர்த்தனத்தில்

'பதிபூடல பைக சதநனு த்யாகரா ஜாப்துனி'

(பத்து நாளில் நீ சாவாய் என்று சொன்ன தியாக ராஜனுடைய ஆப்தனை நான் பார்த்தேன்.) என்னும் சரணத்தை ஆதாரம் கூறுகின்றனர். பத்து நாளைக்கு முன் ஸ்ரீராமர் கனவில் எழுந்தருளிச் சொன்ன பிறகே ஐயரவர்கள் சந்நியாசம் பெற்றனர். சித்தியாகும் தினத்தில் தமது சீடர்களைப் பக்கத்தில் வந்திருக்கும்படி அறிவித்தனர். ஸ்ரீராம பஜனை செய்துகொண்டே சித்தி பெற்றனர் என்று அக்காலத்து உடனிருந்து பார்த்த சீடர் ஒருவர் சொன்னதாகச் சொல்லுகிறார்கள்.

இனி; ஐயரவர்களுக்குச் சந்நியாச ஆசிரமத்தில் இன்ன பெயரிடப்பட்டதென்று புலனாகவில்லை. ஆதலின்; அவரது பூர்வாசிரம நாமத்தையே நாம் உடயோகிக்கவேண்டித் தியாகராஜ சுவாமி அல்லது வேறு வைதீக சம்பிரதாய

நாமங்களால் வழங்காமல் தியாகராஜ ஐயர் என்றே அழைக்க நேர்ந்தது. அவரது சீடர்களும் அவரை நேரிற்கண்டும், கண்டோரைக் கேட்டும், அவரது கீர்த்தனைகளை ஆராய்ந்து அனுபவித்தும் அவர் மாட்டு அன்பு பூண்டோரெல்லோரும் அவரை "ஐயரவாள்" என்று வழங்குவதும், அது அவர்க்கு யோகரூடியாக நிற்பதும் தியாகராஜ ஐயர் என்பதையே வலியுறுத்தலாம். ஐயரவர்கட்கு இண்டிபேர் (குடும்பப் பெயர்) காகர்லா என்பது.

இதற்கு ஆதாரம் ஐயரவர்களது வமிசத்தவராய் இப்பொழுது திருவையாற்றில் ஜீவந்தராயுள்ள இராமுடு ஐயருடைய வாய்மொழியும், ஐயரவர்கள் செய்துள்ள 'நௌகா சரித்திரம் 5-வது பத்தியத்தில் "காகர்லாம் புதிசந்த்ருடு" (காகர்ல குலமாகிய சமுத்திரத்தில் பிறந்த சந்திரன் தியாகராஜன்) என்று எழுதப்பட்டிருப்பதுமேயாம்.

இனி; ஐயரவர்கள் தனித் தனியான அநேக கீர்த்தனைகளேயன்றி (1) நௌகா சரித்திரம் (2) பிரகலாத விஜய நாடகம் என்னும் இரண்டு பிரபந்தங்களும் தெலுங்கில் பாடியுள்ளார்.

ஐயரவர்களின் சீடர்கள்.—

(1) பட்டினம் வீணை குப்பையர்
(2) வாலாஜிபேட்டை வேங்கடரமணபாகவதர்
(3) சுப்புராம பாகவதர்
(4) தில்லைத்தானம் ஐயா பாகவதர்
(5) தில்லைத்தானம் இராமு ஐயங்கார்
(6) உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர்
(7) உமையாள்புரம் சுந்தர பாகவதர்

இவர்களில் 4, 5 சீடர்கள் ஒரு சேர்க்கையாகவும், 6, 7 சீடர்கள் ஒரு சேர்க்கையாகவும் ஐயரவர்களிடம் பாடம் கேட்டவர்கள். இவர்களில் 6, 7 சீடர்களை நேரிற்கண்டோர் இன்னுமிருக்கின்றனர். இதைக்கொண்டு ஐயரவர்கள் சீடர்களை இவ்விரண்டு பேர்களாகச் சேர்த்தே முறைப்படி பாடஞ்சொல்லுவது வழக்கமென்று புலனுகின்றது. இந்த ஏழு சீடர்களிலும் தில்லைத்தானம் இராமு ஐயங்காரிடம் ஐயரவர்களுக்கு மிகுந்த அபிமானமென்று கேள்வி. சுபம்.

'நல்லோர் குணங்க ளுரைப்பதுவு நன்றே'

உ

கடவுள் துணை.

ஸ்ரீ தியாகராஜ ஐயர் துதி.

திருவையா றகலாத கிரிராஜ கவிபுத்ர
ஸ்ரீராம பிர்ம்ம தநயா,
தெலுங்கவே தியர்குலத் தவதரித் திசைபெறும்
தியாகரா ஜைய ரென்னும்

குருவையா, நாதலோ லுடையெனக் கீர்த்தனம்
கூறுநா தோபா சகக்
குணப்பெருங் குன்றமே, கோதிலாக் கீதமே
கொள்கலப் பத்தி யோ.

உருவையா, சீதைமண வாளர்மே லுள்ளன்பின்
உலவாத சாகித் தியம்
ஓரா யிரம்பாடி உலகுயிர்கள் உய்யவருள்
உத்தமக் கான ரிஷியைப்

பொருவை,யா காசசா ரீரம்ப்ர மம்மெனப்
புகலுமெஜுர் வேத வசனம்
புகழ்தத்து வம்பேசு புண்ணியா, நின்னரும்
பொற்பதம் வாழ்க மாதோ.

குஞ்சிதபாதம் கம்பெனி,
ஐயன்கடை, தஞ்சாவூர்.

ஒரு அணா பிரசுரம்

1. தியாகராஜ ஐயர் சரித்திரம்.

அரை அணா பிரசுரம்

1. கந்தபுராண வசனம்.

2. இராமாயண வசனம்.

இப்புத்தகங்களில் வரலாறுகள் சிறிதும் விடாமல் அழகான எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு புத்தகத்திலும் அந்தந்தக் கதைகள் ஒவ்வொரு பாட்டில் அமைத்துப் பாடப்பட்டிருக்கின்றன. சிறுவர் சிறுமியர்கள் மட்டும் அல்ல, எல்லோரும் இனிமையாய்ப் படிக்கத் தகுந்தவை. இப்படிப் பல கதைகள் வரும்.

"கௌரி"

இது ஒரு இனிமையான நாவல்.

இதன் விலை அணா 12.

"சிவேந்திர பாக சாஸ்திரம்"

நளபீம பாகங்கள் இவைகள் என்று சொல்லத்தக்க முறைப்படி தஞ்சை நகரை முன் அரசுபுரிந்த சரபோஜி சிவாஜி மகாராஜாக்களால் சமயல் வேலையில் கீர்த்தி பெற்ற அனுபவிகளைக் கொண்டு செய்யப்பட்ட பாகங்களை எழுதியுள்ளது. இதில் மரக்கறி போஜனம், மாமிச போஜனம், இங்கிலீஷ் போஜனம், பதார்த்த லக்ஷணம், பாகமுறை, அல்வா முதலிய மதுரச் றுண்டி வகைகள், சித்திரான்னங்கள் முதலியன வி கும்.

இதன் விலை

காலிகோ பைண்டு ரூ. 1-8-0 தா பைண்டு ரூ. 1.